ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.08.27 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 யூன்

**பொதுநோக்கு**

இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2018 யூனில் கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. யூன் மாத காலப்பகுதியில் உண்மை நியதிகளிலான வர்த்தகப் பற்றாக்குறையானது ஆண்டுப்பகுதியில் குறைவான மட்டத்தைப் பதிவுசெய்த போதிலும் இறக்குமதிச் செலவினங்களின் வளர்ச்சியானது ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பினை விட கூடுதலாகக் காணப்பட்டதன் விளைவாக 2017 யூனில் வர்த்தகப் பற்றாக்குறையானது குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. 2017 யூனுடன் ஒப்பிடும் போது மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறைவடைந்த போதிலும் ஆண்டின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சிப் போக்கின்படி 2018 யூனில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. சென்மதி நிலுவையின் நிதிக் கணக்கானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதி மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுக முதலீட்டின் மீள்பெறுகையின் மூன்றாவது தொகுதி என்பவற்றினால் துணையளிக்கப்பட்ட போதிலும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள் போன்றன சென்மதி நிலுவையின் மீது சில அழுத்தங்களைப் பிரயோகித்தன. உள்நாட்டு மற்றும் பூகோள வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளின் அபிவிருத்தியைப் பிரதிபலிக்கும் முகமாக இலங்கை ரூபாவானது 2018 யூன் இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக 3.4 சதவீதத்தினாலும் மற்றும் 2018 ஓகத்து 27 வரையான ஆண்டுப்பகுதியில் 5.0 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 9.3 பில்லியனாகக் காணப்பட்டது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [(அ)]

| வகை | யூன் 2017 ஐ.அ.டொ. மில் | யூன் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - யூன் 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - யூன் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 987 | 1,024 | 3.8 | 5,398 | 5,732 | 6.2 |
| இறக்குமதிகள் | 1,541 | 1,819 | 18.1 | 10,149 | 11,441 | 12.7 |
| வர்த்தக மீதி (தேறிய) | -554 | -795 | | -4,751 | -5,709 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 229 (ஆ) | 272 (இ) | 19.0 | 1,874 (ஆ) | 2,160 (இ) | 15.3 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 591 (ஈ) | 524 | -11.4 | 3,591 (ஈ) | 3,624 | 0.9 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 38 | 0.3 | | 229 | 53 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (தேறிய) | 303 | 157 | | 3,369 | 3,838 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 158 | 48 | | 730 | 553 | |
| நீண்ட காலக் கடன்கள் | 145 | 109 | | 689 | 785 | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 450 | - | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 2,500 | |
| ப.நா.நி – விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் பெறுகைகள் | - | 252 | | - | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | | | | 193 | 492 | |
| திரண்ட நிலுவை | | | | 1,563 | 1,148 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.


(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக நிலுவை

வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையானது இறக்குமதிகளின் அதிகரித்த வளர்ச்சியினால் தூண்டப்பட்டு 2017 யூனுடன் ஒப்பிடும் பொழுது 2018 யூனிலும் தொடர்ச்சியாக விரிவடைந்தது. திரண்ட அடிப்படையில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2017இன் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும் போது 2018இல் முதல் அரையாண்டுக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது.


**வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

தொழில்துறை ஏற்றுமதிகளினால் பிரதானமாகத் தூண்டப்பட்ட வணிகப்பொருள் ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டுப்பகுதியில் இரண்டாவது முறையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சி 2018 யூனில் ஐ.அ.டொலர் 1,024 மில்லியனாகக் காணப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்றவற்றிலிருந்தான அதிகரித்த கேள்வியின் காரணமாக கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழான புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்ததுடன் பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளும் அதிகரித்தன. பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் நீர்க்கல மற்றும் வான் எரிபொருட்களின் அளவு மற்றும் அதிகரித்த ஏற்றுமதி விலைகளின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2018 யூனில் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்தது. இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் பிரதானமாக ரயர் ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களின் காரணமாக அதிகரித்தது. பொறி மற்றும் எந்திர சாதனங்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் மின்னியல் பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களின் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பின் பங்களிப்புடன் மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. அதேவேளை, இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள் மற்றும் அலுமினியப் பொருட்களின் அதிகரித்த ஏற்றுமதியின் காரணமாக அடிப்படை உலோகங்கள் மற்றும் அதன் பகுதிகளின் ஏற்றுமதி அதிகரித்தது. ஆயினும் போக்குவரத்து உபகரணங்களின் ஏற்றுமதி வருவாய்கள் பிரதானமாக இரண்டு கப்பல்களின் ஏற்றுமதியினைத் தொடர்ந்து 2017 யூனில் பதிவுசெய்யப்பட்ட அதிகரித்த வருவாய்களின் தாக்கத்தின் காரணமாக குறிப்பிடத்தக்களவால் குறைவடைந்தது. மேலதிகமாக உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள், போக்குவரத்துப் பொருட்கள் மற்றும் காலணிகளின் ஏற்றுமதிகள் 2017 யூனுடன் ஒப்பிடும் போது 2018 யூனில் குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை வேளாண்மை ஏற்றுமதிகளின் வருவாய்களானது கடலுணவு, தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிகள் தவிர்ந்த அனைத்து வகைகளின் குறைந்த செயலாற்றத்தின் காரணமாக 2018 யூனில் வீழ்ச்சியடைந்தது. தேயிலை ஏற்றுமதி வருவாய் 2018 யூனில் விலை மற்றும் ஏற்றுமதி அளவுகளின் குறைவின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. மேலதிகமாக, கறுவா, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்றவற்றின் வளர்ச்சியை விட மிளகு, கராம்பு மற்றும் ஏனைய வாசனைத்திரவியங்களின் வீழ்ச்சியானது அதிகமாகக் காணப்பட்டதன் காரணமாக வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் 2018 யூனில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. ஆயினும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன்பிடி ஏற்றுமதிகளுக்கான தடை நீக்கப்பட்டமை மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டங்கள் + சலுகையின் மீள்கிடைப்பனவு போன்ற சாதகமான தாக்கங்களிலிருந்து நன்மை பயக்கும் வகையில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட கடலுணவுகளின் அதிகரித்த விலை மற்றும் அளவுகளின் காரணமாக மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்தது. இலங்கையின் வணிக ஏற்றுமதிகளுக்கான பிரதான சந்தையாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, இத்தாலி மற்றும் ஜேர்மனி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் 48 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)


| வகை | யூன் 2017 ஐ.அ. டொ. மில் | யூன் 2018 ஐ.அ. டொ. மில் | மாற்றம் (%) | சன - யூன் 2017 ஐ.அ. டொ. மில் | சன - யூன் 2018 ஐ.அ. டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **749.8** | **800.7** | **6.8** | **4,065.8** | **4,433.7** | **9.0** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 58.9 | 38.7 | (34.2) | 190.8 | 232.3 | 21.7 |
| விலங்குத்தீன் | 7.2 | 8.5 | 18.1 | 40.6 | 54.2 | 33.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 398.1 | 453.5 | 13.9 | 2,383.6 | 2,519.0 | 5.7 |
| இதில் ஆடைகள் | 375.4 | 419.4 | 11.7 | 2,244.7 | 2,350.8 | 4.7 |
| புடவைகள் | 15.9 | 25.7 | 61.7 | 99.7 | 120.6 | 20.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் | 6.8 | 8.3 | 21.5 | 39.2 | 47.5 | 21.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 73.1 | 77.3 | 5.8 | 388.5 | 426.4 | 9.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 20.6 | 21.7 | 5.1 | 123.9 | 151.4 | 22.2 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 28.5 | 45.0 | 57.7 | 180.4 | 219.9 | 21.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 54.3 | 8.5 | (84.3) | 125.0 | 51.0 | (59.2) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 29.2 | 52.7 | 80.7 | 176.9 | 272.0 | 53.8 |
| இரசாயன உற்பத்திகள் | 12.0 | 15.2 | 27.3 | 70.2 | 81.8 | 16.5 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.1 | 12.4 | 12.0 | 67.5 | 70.4 | 4.3 |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 4.0 | 3.8 | (3.0) | 17.7 | 10.2 | (42.4) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 15.4 | 12.5 | (18.9) | 77.7 | 77.5 | (0.2) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.7 | 6.7 | 0.7 | 35.8 | 38.6 | 7.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 6.8 | 15.1 | 121.0 | 51.4 | 77.0 | 49.9 |
| இரசாயன உற்பத்திகள் | 3.2 | 2.8 | (10.9) | 16.0 | 14.7 | (8.4) |
| ஏனையவை | 20.8 | 26.1 | 25.5 | 119.7 | 137.3 | 14.7 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **232.0** | **219.4** | **(5.4)** | **1,306.4** | **1,272.3** | **(2.6)** |
| தேயிலை | 138.6 | 129.6 | (6.5) | 728.4 | 728.9 | 0.1 |
| இறப்பர் | 2.0 | 2.2 | 10.4 | 23.9 | 18.7 | (21.7) |
| தேங்காய் | 30.1 | 25.0 | (17.1) | 173.8 | 150.1 | (13.6) |
| வாசனைத்திரவியம் | 27.8 | 27.7 | (0.5) | 160.7 | 149.7 | (6.9) |
| மரக்கறிகள் | 2.3 | 1.8 | (20.7) | 14.7 | 12.6 | (14.2) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.9 | 3.5 | 20.9 | 16.4 | 16.8 | 2.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 13.1 | 10.6 | (18.6) | 71.4 | 62.1 | (13.0) |
| கடலுணவு | 15.2 | 18.9 | 24.5 | 117.1 | 133.4 | 13.9 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **5.5** | **4.2** | **(22.3)** | **25.4** | **25.9** | **1.9** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **987.3** | **1,024.4** | **3.8** | **5,397.6** | **5,731.9** | **6.2** |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




வணிகப்பொருட்களின் இறக்குமதிச் செலவினமானது பிரதானமாக எரிபொருள், ஊர்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் மீதான அதிகரித்த செலவினங்களின் காரணமாக 2018 யூனில் ஐ.அ.டொலர் 1,819 மில்லியனுக்கு அதிகரித்தது. இடைநிலைப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட எண்ணெய் இறக்குமதிச் செலவினமானது கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் அதிகரித்த இறக்குமதி விலை மற்றும் அளவுகளின் தாக்கத்தினால் மாத காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தது. மேலதிகமாகப் புடவை மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் அனைத்து உப பிரிவுகளின் குறிப்பாக, துணி மற்றும் நூல் இறக்குமதிகளின் செலவினத்தினைப் பிரதிபலிக்கும் விதத்தில் 2018 யூனில் அதிகரித்தது. அத்துடன் மாத காலப்பகுதியில் இடைநிலைப்பொருட்களின் அதிகரித்த இறக்குமதிக்கு அடிப்படை உலோகங்கள், கோதுமை மற்றும் சோளம், வளமாக்கி மற்றும் உணவுச் செயன்முறைகள் பங்களித்தன. ஆயினும், 2016 ஆரம்பத்திலிருந்து கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்த தங்க இறக்குமதிச் செலவினமானது 2018 யூனில் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நுகர்வுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தனிநபருக்கான ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினமானது 1,000 சிலிண்டர் வலுவிற்குக் குறைந்த வாகனங்கள் கலப்பு மற்றும் மின்னியல் வலு ஊர்திகள் என்பவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் தூண்டுதலினால் 2018 யூனில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. 2018 ஓகத்து 1 இலிருந்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சிறிய ஊர்திகளின் இறக்குமதிகளுக்கான வரிகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டதன் காரணமாக எதிர்வரும் மாதங்களில் ஊர்திகளின் இறக்குமதிகளானது குறிப்பிட்டளவில் குறைவடைய எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், நுகர்வுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடலுணவுகள், அரிசி மற்றும் சீனி இறக்குமதிகளின் வீழ்ச்சியானது மாத காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட அழுத்தத்தைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்தது. அதேவேளை, பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் கட்டடப்பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்த போதிலும் நான்கு கப்பல்கள் வணிக ஊர்திகள் மற்றும் முச்சக்கர வண்டிகளை உள்ளடக்கிய வீதி ஊர்திகள் என்பவற்றின் இறக்குமதியினால் தூண்டப்பட்ட போக்குவரத்துச் சாதனங்களின் மீதான அதிகரித்த செலவினமானது முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பிற்கு வழியமைத்தது. சீனா, இந்தியா, யப்பான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் முக்கிய இறக்குமதி மூலங்களாக விளங்கி மொத்த இறக்குமதியில் ஏறத்தாழ 58 சதவீதத்திற்கு வகைககூறின.

# அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | யூன் 2017 ஐ.அ.டொ. மில் | யூன் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - யூன் 2017 ஐ.அ.டொ. மில் | சன - யூன் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **322.7** | **425.9** | **32.0** | **2,221.8** | **2,620.7** | **18.0** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 131.4 | 125.8 | (4.2) | 923.5 | 907.1 | (1.8) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 7.5 | 1.9 | (74.4) | 138.1 | 109.7 | (20.5) |
| இதில் அரிசி | 6.6 | 0.5 | (92.1) | 131.8 | 100.1 | (24.0) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 25.9 | 22.6 | (13.0) | 150.7 | 152.9 | 1.5 |
| பால் உற்பத்திகள் | 23.5 | 28.8 | 22.7 | 160.4 | 166.7 | 3.9 |
| மரக்கறிகள் | 27.1 | 28.3 | 4.7 | 176.7 | 170.0 | (3.8) |
| கடலுணவு | 20.4 | 10.6 | (47.9) | 110.8 | 104.6 | (5.6) |
| குடிபானங்கள் | 6.0 | 9.7 | 62.1 | 38.9 | 43.0 | 10.7 |
| வாசனைத்திரவியங்கள் | 7.3 | 8.2 | 12.4 | 50.7 | 51.9 | 2.3 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 13.7 | 15.6 | 14.0 | 97.2 | 108.2 | 11.3 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 191.3 | 300.1 | 56.9 | 1,298.4 | 1,713.7 | 32.0 |
| தனியாள் ஊர்திகள் | 54.0 | 146.8 | 171.8 | 370.2 | 812.7 | 119.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 45.0 | 48.3 | 7.3 | 248.7 | 258.8 | 4.0 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 16.2 | 24.8 | 53.2 | 133.3 | 141.4 | 6.1 |
| ஆடை மற்றும் துணைப்பொருட்கள் | 24.5 | 24.6 | 0.6 | 198.9 | 165.1 | (17.0) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 18.4 | 18.3 | (0.4) | 128.3 | 120.0 | (6.5) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடங்கள் | 12.5 | 13.4 | 7.5 | 81.7 | 84.1 | 3.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 6.6 | 7.9 | 19.1 | 44.7 | 45.2 | 1.1 |
| ஒப்பனை மற்றும் அழகுச்சாதனங்கள் | 7.1 | 5.7 | (18.8) | 43.4 | 36.0 | (17.1) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 7.1 | 10.3 | 44.7 | 49.2 | 50.4 | 2.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **792.1** | **947.4** | **19.6** | **5,349.0** | **6,319.9** | **18.2** |
| எரிபொருள் | 200.6 | 342.7 | 70.9 | 1,624.5 | 2,093.6 | 28.9 |
| இதில் மசகெண்ணெய் | 35.6 | 111.8 | 213.9 | 279.4 | 431.3 | 54.4 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 164.9 | 228.1 | 38.3 | 1,174.3 | 1,515.2 | 29.0 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 56.9 | 8.5 | (85.1) | 328.0 | 495.2 | 51.0 |
| இதில் தங்கம் | 46.0 | 0.4 | (99.2) | 274.9 | 437.8 | 59.2 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 219.0 | 230.9 | 5.4 | 1,306.9 | 1,360.5 | 4.1 |
| இரசாயன உற்பத்திகள் | 67.1 | 72.0 | 7.4 | 408.2 | 446.0 | 9.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 49.1 | 52.8 | 7.5 | 302.6 | 353.0 | 16.7 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 41.1 | 45.1 | 9.9 | 223.1 | 250.4 | 12.2 |
| அடிப்படை உலோகங்கள் | 32.5 | 43.4 | 33.6 | 251.9 | 289.1 | 14.8 |
| உணவுச் செயன்முறைகள் | 18.6 | 26.8 | 44.3 | 146.8 | 162.3 | 10.5 |
| வளமாக்கி | 12.0 | 20.6 | 71.5 | 39.1 | 121.2 | 209.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 7.3 | 18.1 | 148.5 | 162.5 | 193.0 | 18.8 |
| கனிம உற்பத்திகள் | 15.0 | 10.1 | (32.7) | 93.8 | 85.1 | (9.3) |
| ஏனையவை | 73.1 | 76.3 | 4.5 | 461.6 | 470.7 | 2.0 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **405.3** | **443.5** | **9.4** | **2,447.2** | **2,432.4** | **(0.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 220.2 | 195.6 | (11.2) | 1,319.0 | 1,263.9 | (4.2) |
| கட்டடப் பொருட்கள் | 128.5 | 117.2 | (8.8) | 789.6 | 759.2 | (3.9) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போக்குவரத்துச் சாதனங்கள் | 55.8 | 130.4 | 133.9 | 333.8 | 406.0 | 21.6 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.8 | 0.3 | (63.8) | 4.7 | 3.3 | (29.3) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **20.8** | **2.7** | **(87.1)** | **130.9** | **68.0** | **(48.1)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,540.9** | **1,819.5** | **18.1** | **10,149.0** | **11,441.1** | **12.7** |


(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2018 யூனில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளானது 146,828 இற்கு 19.0 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இது 2017 யூனுடன் ஒப்பிடும் போது இந்தியா, அவுஸ்திரேலியா, சவுதி அரேபியா மற்றும் சீனாவிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியின் விளைவாக அமைந்தது. 2018இன் முதல் அரையாண்டில் 1,164,647 மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 2017இன் முதல் அரையாண்டை விட 15.3 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. 2018 யூன் மாத காலப்பகுதிக்கான சுற்றுலா வருவாயானது ஐ.அ.டொலர் 272 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருப்பதுடன் 2018இன் முதல் அரையாண்டு காலப்பகுதிக்கான திரண்ட வருவாய்களானது ஐ.அ.டொலர் 2,160 ஆகக் காணப்படுகின்றது. அதேவேளை முன்னை மாதத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியின் தொடர்ச்சியாக தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018 யூனில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 524 மில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக தொழிலாளர் பணவனுப்பல்களானது 2017இன் முதல் அரையாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2018இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 0.9 சதவீதமான திரண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து ஐ.அ.டொலர் 3,624 ஆகக் காணப்பட்டது.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி


**நிதியியல் பாய்ச்சல்கள்**

முதலாந்தரம் மற்றும் இரண்டாந்தரச் சந்தையில் வெளிநாட்டுச் செலவாணிப் பாய்ச்சல்கள் உள்ளிட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2018 யூனில் ஐ.அ.டொலர் 0.3 மில்லியன் கொண்ட சிறியளவான தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, 2018இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான திரண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 53 மில்லியனாக விளங்கின. அதேவேளை, அரசாங்கப் பிணையங்கள் சந்தையானது 2018 யூனில் ஐ.அ.டொலர் 74 மில்லியன் அளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்ததுடன் 2018 யூன் முடிவில் தேறிய திரண்ட வெளிப்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 176 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், 2018 யூனில் அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள் ஐ.அ.டொலர் 115 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

ஐ.அ.டொலர் 252 மில்லியன் பன்னாட்டு நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஐந்தாவது தொகுதிப் பெறுகை மற்றும் ஐ.அ.டொலர் 585 மில்லியனான அம்பாந்தோட்டைத் துறைமுக முதலீட்டின் மீள்பெறுகையின் மூன்றாவது தொகுதிக் கிடைப்பனவுகள் என்பவற்றினால் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 மே இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8.8 பில்லியனிலிருந்து 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 9.3 பில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வொதுக்கு மட்டமானது 5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 11.3 பில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் இது 6.1 மாத இறக்குமதிக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீத அசைவுகள்**

2018 ஓகத்து 27 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 5.0 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா இக்காலப்பகுதியில் யூரோ, பவுண் ஸ்ரேலிங், யப்பானிய யென் மற்றும் கனேடியன் டொலர் என்பவற்றிற்கு எதிராக தேய்வடைந்த அதேவேளை அவுஸ்ரேலியன் டொலர், இந்திய ரூபாவிற்கு எதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 ஓகத்து 27 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -5.0% |
| யூரோ | -13.5% | -2.5% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -0.6% |
| யப்பானிய யென் | -5.1% | -6.4% |
| கனேடியன் டொலர் | -8.6% | -1.6% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | +1.1% |
| இந்தியன் ரூபா | -7.5% | +3.7% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி